**சென்னை–13, இராயபுரம், அரசு இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, கண்காணிப்பாளர்(மு.கூ.பொ.) அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: மரு.V.ராஜலட்சுமி,எம்.டி., டி.ஜி.ஓ.,**

மூ.மு.எண்: 2556/நி2/2022 நாள்: 19 .05.2022

பொருள்: நிர்வாகம் - அரசு இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, இராயபுரம், சென்னை–13 – திரு.கு.இராமசாமி, இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்ததற்கான ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், செயலாளர் அவர்களின் கடித ந.க.எண்.2383/PSD-12/2020 நாள்.21.07.2020
2. சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.31495/நி2/2/2020 நாள்.05.08.2020
3. சென்னை-10, கீழ்ப்பாக்கம், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.38842/நி2/5/2020-30 நாள்.07.08.2020
4. சென்னை–13, அரசு இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, கண்காணிப்பாளர் அவர்களின் பணிநியமன செயல்முறை ஆணை கடித ந.க.எண்.3306/நி2/2020–2 நாள்.31.08.2020
5. திரு.கு.இராமசாமி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியில் இணைதல் கடித நாள்.09.09.2020
6. சென்னை–13, அரசு இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, கண்காணிப்பாளர் அவர்களின் பணியில் இணைதல் கடித ந.க.எண்.3306/நி2/2020 நாள்.14.09.2020

*****

**ஆணை**

பார்வையில் கண்டுள்ள ஆணைகளின்படி, திரு.கு.இராமசாமி அவர்கள் இம்மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக 09.09.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-IV க்கான போட்டி தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் இளநிலை உதவியாளர் பணியமர்த்துவதற்கு, அந்த பதவிக்கு தேவையான அனைத்து தகுதிகளையும் முழுமையாக பெற்றுள்ளார்.

இவர் பணி வரன்முறைப்படுத்துதல் காலத்தில் தற்செயல் விடுப்பை தவிர்த்து பிற விடுப்புகள் எதுவும் துய்க்காமல் தனது ஓராண்டு பணியை 08.09.2021 பிற்பகல் திருப்திகரமாக முடித்துள்ளார்.

மேற்படியார், அப்பணியிடத்தில் தற்போது எவ்விதமான குற்றச் செயல்களில் ஈடுபடாமல் பணியாற்றி வருவதாக அறியப்படுகிறது. இவர் மீது எவ்விதமான வழக்கும் நிலுவையில் இல்லை எனவும் அறியப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளின் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பதவியில் திரு.கு.இராமசாமி அவர்களின் தற்காலிகப் பணியை அவர் அப்பதவியில் பணியில் இணைந்த நாள் முதல் அதாவது 09.09.2020 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இவரது பணியை பணிவரன்முறைப்படுத்தப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the Writ Petitions pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination IV for the year 2018-2019 and 2019-2020".

மேற்படியாரின் பணிவரன்முறை தொடர்பான விவரங்கள் அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

திரு.கு.இராமசாமி அவர்களின் தற்காலிக பணியில் வரன்முறைப்படுத்தப்பட்ட 09.09.2020 முற்பகல் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு உட்பட்டு இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவம் வைக்கப்படுகின்றார் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

கண்காணிப்பாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்

திரு.கு.இராமசாமி,
இளநிலை உதவியாளர்
அரசு இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை,
இராயபுரம்,சென்னை– 13.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது

1. மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்ககம்
   தேனாம்பேட்டை, சென்னை-6
2. மருத்துவக் கல்வி இயக்ககம்
   கீழ்ப்பாக்கம், சென்னை-10

நகல்

1. சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு)
   சென்னை – 1
2. சம்பளப் பட்டியல் பிரிவு (அலுவலக கண்காணிப்பாளர் மூலமாக)
3. உதிரி